**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 322/2023**
**Prosecution Witness – PW 5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தேவதாஸ் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2026.
(A1, A2, A3 is present. A4 absent. Petition U/s.355 BNSS is filed and allowed).
முதல் விசாரணை–

நான் மிடாலத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்த வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி 1 முதல் 3 வரையுள்ளவர்களை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாத எதிரிகளை பற்றியும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 27.04.2010 ம் தேதி 13.45 மணிக்கு நானும் என் உடன் ரத்தினசாமி மகன் தேவதாசும் பூடேற்றி பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தோம். அப்போது விழுந்தையம்பலத்தை நோக்கி அரசு பஸ் எண்.TN 29 55 தடம் எண் 9C/B TSS வந்து பூடேற்றி பஸ் நிறுத்தத்தில் ஆட்களை ஏற்றி இறக்கி விட்டு பின்னர் விழுந்தையம்பலத்தினை நோக்கி புறப்பட்டது என்றும், அந்த சமயம் TN 74 C 1381 எண் கொண்ட ஆட்டோவில் வந்த அ.தி.மு.க ஒன்றிய செயலாளர் ஜார்ஜ் மற்றும் வர்கீஸ் மகன் ஆனந்த், கல்லுவிளை மாங்கரை ஊரை சார்ந்த முருகன் மற்றும் உதயமார்த்தாண்டத்தை சேர்ந்த மற்றொரு முருகனுமாக சேர்ந்து ஆட்டோவில் இருந்து இறங்கி பஸ் பின்பக்க கண்ணாடி முழுவதுமாக சேதபடுத்தினார்கள் என்றும், எரிந்த வேகத்தில் அவர்கள் நால்வரும் அதே ஆட்டோவில் சென்று விட்டார்கள் என்றும், பஸ் ஓட்டுநர் அலெக்ஸ் அதன்

நடத்துனர் புகார் கொடுக்க கருங்கல் காவல் நிலையம் சென்றனர் என்றும், மேற்படி சம்பவத்தினை நான் நேரடியாக பார்த்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் நான் சுமூகமான உறவு முறையில் இருப்பதால், அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**